


# பரிசில் நாள் 2013

## 26-09-2013

## வியாழக்கிழமை

## மு. ப. 08.30 மணி

தலைவர்

**திரு. ஐ. தேவஈஸ்வரன் அவர்கள்**

(வித்தியாலய முதல்வர்)

முதன்மை விருந்தினர்

**திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்கள்**

(வலயக்கல்விப்பணிப்பாளர் - தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்

**திரு. த. சோதிலிங்கம் அவர்கள்**

(வித்தியாலய முன்னாள் அதிபர்)

# நிகழ்ச்சி நிரல்

- ✳ விருந்தினர் வரவேற்பு
- ✳ கொடியேற்றல்
- ✳ மங்கல விளக்கேற்றல்
- ✳ இறைவணக்கம்
- ✳ ஆசியுரை
- ✳ வரவேற்புரை
- ✳ முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை
- ✳ பரிசில் வழங்கல்
- ✳ விருந்தினர் உரை
- ✳ நன்றியுரை

## கலைநிகழ்வுகள்

- ✳ வரவேற்பு நடனம்
- ✳ குழு இசை
- ✳ கவிதை
- ✳ தனி நடனம்
- ✳ ஆங்கில அபிநயப்பாடல்
- ✳ சுளகு நடனம்
- ✳ பாடசாலைக்கீதம்

## மகுட வாசகம்

கசடறக் கற்று கதிரென வாழ்

## எமது பாடசாலையின் நோக்கு (Vision)

எமது பலத்தையும், வினையாற்றலையும், அர்ப்பணிப்பையும், ஆளுமைப் பண்பினால் அனைத்து சகல மாணவர்களினதும் கல்விப் புலமைக்கு வழிகாட்டி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் சிறந்த பாடசாலையாகத் திகழ்தல்.

## செயற்பாட்டு நோக்கு (பணிக்கூற்று) (Mission)

பிரதேசத்தின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைத் தழுவி ஆற்றலும் ஆளுமையும் வாய்ந்த ஆசிரியர்களால் மாணவர்களின் தேவைக்கும் எதிர்பார்ப்பிற்கும் இசைவாக முழுமையான புத்தாக்க மலர்ச்சியுடைய கல்வியை வழங்கல்.

## பாடசாலைக்கீதம்

வாழிய வாழிய வாழிய மிருசுவில்
வாழிய அரசினர் தமிழ்ப் பாடசாலை (வாழிய)

### அனுபல்லவி

வையகத்தினிலே வளர்புகழோடு
வளமுடன் என்றென்றும் வாழியவே (வாழிய)

### சரணம்

பருவப் பயிர்கள் நாம் பயின்று செழித்திட
பக்குவமாய் எமக்கறிவினையூட்டி
நெறிமுறை வாழ்ந்திட நேர்வழி காட்டிடும்
குருவினை என்றென்றும் பணிந்திடுவோமே. (வாழிய)

எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றி
எங்கள் கடமையில் சிறந்திடுவோமே
பெருகிடும் தமிழில் பெருமையை நாளும்
பேணிவளர்த்திட பயின்றிடுவோமே. (வாழிய)

# பாடசாலை முதல்வரின் பரிசில் நாள் அறிக்கை

எமது வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்,
**உயர்திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்களே!**

சிறப்பு விருந்தினராக வருகை தந்து எம்மை எல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருக்கும் இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்
**உயர்திரு. த. சோதிலிங்கம் அவர்களே!**

எமது விழாவில் ஆசியுரை வழங்கிச் சிறப்பிக்கவுள்ள
**தில்லையம்பலக்குருக்கள் ஐயா அவர்களே!**

எமது கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர்களே! கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களே! உதவிக்கல்விப் பணிப் பாளர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர்களே, பழையமாணவர் சங்க செயலாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர் களே, பெற்றோர்களே, பழையமாணவர்களே, நலன் விரும்பிகளே, எமது பாடசாலையின் ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து இவ் விழாவைச் சிறப்பித்துக்கொண்டிருக்கும் வலயக்கல்விப்பணிப்பாளர் உயர்திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்களே, தாங்கள் எமது விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பிப்பது பாடசாலைச் சமூகத்தினரை மகிழ்ச்சியில் ஆழ்த்தி யுள்ளது.

வேகமும், விவேகமும் கொண்ட தாங்கள் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சிக்காக முனைப்புடன் செயற் படுவதுடன் தங்கள் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்களையும்

சிறப்பாகச் செயற்பட வழிகாட்டிக் கொண்டிருப்பது எமது வலயத்திற்குக் கிடைத்த அருங்கொடையாகும்.

தாங்கள் மாதகலைப் பிறப்பிடமாக கொண்டிருந்த போதிலும் சேவையாற்றும் எப் பிரதேசமாக இருப்பினும் முழுமனதுடனும் அர்ப்பணிப்புடனும் துணிவுடனும் தாங்களாற்றும் சேவை போற்றுதற்குரியதாகும்.

ஆரம்ப சேவைக் காலத்தில் தாங்கள் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக செயற்பட்டதன் காரணமாக தென்மராட்சியில் விசேடமாக கணித, விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு தாங்கள் செயலூக்கம் காட்டி வருகிறீர்கள்.

அத்துடன் தென்மராட்சியில் க.பொ.த. சாதாரணதர பெறுபேற்றை உயர்த்துவதற்காக பாடசாலைகள் தோறும் தாங்கள் தங்கள் உதவிக்கல்விப்பணிப்பாளர்கள் சகிதம் நேரடியாகச் சென்று பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை தங்களின் வினைத்திறனான செயற்பாட்டை வெளிக்காட்டுகின்றது.

முதன் முதலாக எமது பாடசாலைக்கு வந்திருக்கும் தாங்கள் எமது பாடசாலையின் நிலைமை பற்றி அறிந்து எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள் என நம்புகின்றோம்.

எமது அழைப்பிற்கு மதிப்பளித்து இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்து எம்மையெல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருக்கும் உசன் இராமநாதன் மகா வித்தியாலய அதிபரும் முன்னாள் எமது பாடசாலை அதிபருமான உயர்திரு. த. சோதிலிங்கம் அவர்களே!

தாங்கள் எழில் கொஞ்சும் எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் பிறந்து ஆரம்ப, இடைநிலைக் கல்வியை எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயத்திலும், உயர்நிலைக்கல்வியை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், பயின்று புனிதமான ஆசிரியப்பணியைச்

சொந்த மண்ணிலேயே தொடங்கியவர். தொடர்ந்து கலைமாணிப் பட்டதாரியாகி வாண்மை விருத்திக்கான பட்டப்பின் கல்வி டிப்புளோமா பட்டத்தையும் கல்வியியல் (M.E.D) முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட தாங்கள் அறிவுத் திரட்சியாலும் ஆளுமை விருத்தியாலும் அதிபராகி உன்னத சேவை புரிந்த, புரிந்து கொண்டிருக்கும் நல்லதிபர்.

எமது பாடசாலையில் 2003-ம் ஆண்டு டிசம்பர் மாதம் அதிபராகக் கடமைப் பொறுப்பை ஏற்ற தாங்கள் எமது பாட சாலையின் வளர்ச்சிக்குத் தேவையான நல்லாசிரிய வளங்களைப் பெற்றதோடு, பாடசாலைச் சமூகத்தோடும் வெளிச்சமூகத்தோடும் அன்பாகப் பழகி வேண்டிய வளங்கள் எல்லாவற்றையும் அவ்வப்போது பெற்று எமது பாடசாலையை வெளியுலகு அறியும் வண்ணம் வளர்த் தெடுத்த பெருமகன். எமது பாடசாலை வரலாற்றில் ஒன்பது வருடங்களாக ஒப்பற்ற பணியாற்றிய தாங்கள் கடந்த இரு வருடங்களாக கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நல்லதிபர் விருதினைத் பெற்றுக் கொண்டமை தங்களது தன்னலமற்ற அர்ப்பணிப்புடன் கூடிய பணியைப் பறைசாற்றி நிற்கிறது.

இத்தகைய பெருமைக்குரிய தங்களை இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் காண்பதையிட்டுப் பாடசாலையின் முழுச் சமூகமுமே பெருமகிழ்வடைகின்றது.

எமது அழைப்பை ஏற்று இந்நிகழ்விற்கு வருகை தந்த பெரியோர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றுப் பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பான முதன்மையான விடயங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

## மாணவர் விபரம்

| | 2012 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| விபரம் | ஆண் | பெண் | மொ. | ஆண் | பெண் | மொ |
| ஆரம்பப்பிரிவு | 60 | 55 | 115 | 55 | 50 | 105 |
| இடைநிலைப்பிரிவு | 63 | 63 | 126 | 67 | 68 | 135 |
| மொத்தம் | 123 | 118 | 241 | 122 | 118 | 240 |

## ஆசிரிய ஆளணி

| வகை | 2012 | 2013 |
|---|---|---|
| பயிற்றப்பட்டவர்கள் | 06 | 06 |
| பட்டதாரிகள் | 12 | 09 |
| பயிற்றப்படாதவர்கள் | - | 01 |
| மொத்தம் | 18 | 16 |

## 2012 – 2013–ல் இடமாற்றம் பெற்றுச் சென்றோர்

திரு. மு. இராசலிங்கம் - ஆசிரியர்

திரு. த. சோதிலிங்கம் - அதிபர்

திருமதி சி. கோபாலகிருஷ்ணர் - ஆசிரியர்

திருமதி டெ. அரியம் றொபேட் - ஆசிரியர்

## புதிதாக நியமனம் பெற்றோர்

திரு. த. சசீகரன் - உடற்கல்வி ஆசிரியர்

## 2012 – 2013 – ல் இடமாற்றம் பெற்று வந்தோர்.

திரு ந. விமலகுமார் - ஆசிரியர்

திருமதி கு. மகாதேவா - ஆசிரியர்

திரு. ஐ. தேவஈஸ்வரன் - அதிபர்

## தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சைப் பெறுபேறுகள்

| ஆண்டு | தோற்றியோர் | வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றோர் | 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | சான்றிதழ் பெற்றோர் |
|---|---|---|---|---|
| 2010 | 25 | 01 | 07 | 10 |
| 2011 | 27 | - | 09 | 11 |
| 2012 | 24 | 01 | 10 | 12 |

## க.பொ.த சா/தரப் பெறுபேறுகள்

| | 2011 | 2012 |
|---|---|---|
| தோற்றியோர் தொகை | 23 | 20 |
| 6 பாடங்களிலும் அதற்கு மேலும் சித்திபெற்றோர் | 12 | 14 |
| 6 பாடங்களிலும் அதற்கு மேலும் சித்திபெற்றோர் வீதம் | 52% | 70% |
| க.பொ.த (உ/த) தகுதி பெற்றோர் | 08 | 09 |
| க.பொ.த (உ/த) தகுதி பெற்றோர் வீதம் | 35% | 45% |

## க.பொ.த சா/தரப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு – 2012

| பாடம் | தோற்றியோர் | A சித்தி | A சித்தி % | B சித்தி | B சித்தி % | C சித்தி | C சித்தி % | S சித்தி | S சித்தி % | மொத்த சித்தி | மொத்த சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. சைவசமயம் | 19 | 17 | 89 | 01 | 05 | 01 | 05 | – | – | 19 | 100% |
| 2. தமிழ்மொழியும் இலக்கியமும் | 20 | 04 | 20 | 01 | 05 | 06 | 30 | 08 | 40 | 19 | 95% |
| 3. ஆங்கில மொழி | 20 | – | – | – | – | 01 | 05 | 03 | 15 | 04 | 20% |
| 4. கணிதம் | 20 | 01 | 05 | 02 | 10 | 02 | 10 | 04 | 20 | 09 | 45% |
| 5. வரலாறு | 20 | 01 | 05 | 03 | 15 | 05 | 25 | 04 | 20 | 13 | 65% |
| 6. விஞ்ஞானம் | 20 | 01 | 05 | 02 | 10 | 04 | 20 | 07 | 35 | 14 | 70% |
| 7. புவியியல் | 20 | 03 | 15 | 05 | 25 | 06 | 30 | 05 | 25 | 19 | 95% |
| 8. சங்கீதம் | 18 | 04 | 22 | 02 | 11 | 05 | 28 | 06 | 33 | 17 | 94% |
| 9. தகவல் தொ. நு | 07 | – | – | – | – | 01 | 14 | 02 | 29 | 03 | 43% |
| 10. விவசாயமும் உ.தொ | 11 | 03 | 27 | – | – | 03 | 27 | 04 | 36 | 10 | 91% |
| 11. மனையியல் | 02 | – | – | – | – | – | – | 01 | 50 | 01 | 50% |
| 12. கிறீஸ்தவ சமயம் | 01 | – | – | 01 | 100% | – | – | – | – | 01 | 100% |

# பாடசாலையில் சிறப்பாக இயங்கும் துறைகள்

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்

ஒரு மனிதனை ஆளுமைமிக்க முழுமனிதனாக உருவாக்கும் செயன்முறையில் பாடசாலைகளில் கலைத்திட்டத்துடன் இணைக் கலைத்திட்டமும் முக்கியம் பெறுகிறது. அந்த வகையில் எமது பாடசாலையும் வலயக்கல்வி அலுவலகத்தால் நடாத்தப்படும் அனைத்துப் போட்டிகளிலும் பங்கேற்பதுடன் சான்றிதழ்களும் பரிசில்களும் பெற்றுக்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களும் ஆசிரியர்களும் காட்டிவரும் அக்கறையும் விடாமுயற்சியும் மெச்சத்தக்கது. பாடசாலையில் மைதான வசதியோ, உடற்கல்வி ஆசிரியரோ இவ்வருட நடுப்பகுதி வரை இல்லாதபோதும் கடந்த ஆறு ஆண்டுகளாக தென்மராட்சி வலயத்திலுள்ள தரம் II பாடசாலைகளுக்கிடையே எமது பாடசாலை இரண்டாமிடத்தைப் பெற்றதுடன் கடந்த வருடம் முதலாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. இவ்வருடமும் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. கடந்த வருடம் இரு மாணவிகளும் இவ்வருடம் ஒரு மாணவியும் சிறந்த வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் எமது மாணவர்கள் கடந்த காலங்களில் மாவட்ட, மாகாண மட்டங்களில் இடங்களைப் பெற்றுத் தேசிய மட்டங்களில் பங்கேற்றுள்ளமையும் சிறப்பிற்குரியது.

பாடசாலையில் இயங்கும் மன்றங்கள் வரிசையில் ஆரம்ப மாணவர்மன்றம், தமிழ் மன்றம், இந்து மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், போன்றன இயங்கி வருகின்றன. அத்துடன் சாரணர் குழுக்களும் இயங்கி வருகின்றன. அந்த வகையில் சாரணர் தலைவர் ஒருவரும், குருளைச் சாரண தலைவியர் இருவருமாக மூன்று ஆசிரியர்கள் இவற்றை இயக்கி வருவதும் குறிப்பிடப்பட வேண்டியதே.

சமூக விஞ்ஞானத்துறையைப் பொறுத்தவரையில் கடந்த வருடம் எமது மாணவர்கள் வலய மட்ட சமூக விஞ்ஞான வினா விடைப் போட்டியில் தெரிவாகி ஒரு மாணவி மாகாணமட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றதுடன் தேசிய மட்டத்தில் ஐந்தாம்

இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளமையும் பாராட்டிற்குரியது. இந்த வருடமும் இரண்டு மாணவர்கள் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளதோடு தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்று முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றமையையும் குறிப்பிட விரும்பு கின்றேன். அதற்காகப்பாடுபட்டுவரும் சமூக விஞ்ஞான ஆசிரியர் பாராட்டுக்குரியவரே. அதே போலத் தமிழ்த்தினப் போட்டிகளிலும் கடந்த வருடம் எமது பாடசாலை வலய மட்டத்தில் பத்து இடங் களைப் பெற்றிருந்ததுடன் மாவட்ட மட்டத்திலும் இரு இடங்களைப் பெற்றிருந்தது.

அழகியற் துறையைப் பொறுத்தவரை எமது பாடசாலையில் சங்கீத, நடன வகுப்பறைகளே இல்லாத போதும், ஆசிரியர்களின் விடாமுயற்சியாலும் அர்ப்பணிப்பாலும் இசை, நடனப் போட்டிகளிலும் எமது பாடசாலை கடந்த இரு வருடங்களாக மாவட்டப்போட்டிகள் வரை சிறப்பாகப் பங்கேற்று வருகின்றமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதே. அதிலும் நடன ஆசிரியர் பல மைல்கள் தொலைவி லிருந்து பாடசாலைக்கு விடுமுறைக்காலங்களில் கூட மிக விருப்புடன் வருகை தந்து பயிற்சிகள் வழங்கி மாவட்ட நிலைகளில் சிறப்பாகப் பங்கேற்கச் செய்து வெற்றிகள் பெற வழிசமைப்பதும் கூறவேண்டியதே.

எமது பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக சிறப் பானதொரு மேலைத்தேய வாத்தியக்குழு உருவாக்கப்பட்டு பாடசாலை விழாக்களில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றமை குறிப்பிடப்பட வேண்டியதே. அதற்காக அயராது பாடுபடும் சங்கீத ஆசிரியையுடன் உதவியாகப் பயிற்சியளித்துவரும் ஆசிரியைகளும் பாராட்டிற் குரியவர்கள்.

ஏனைய பாடசாலைகளைப் போல எமது பாடசாலையிலும் கணினிக் கல்வியைக் கற்க, தேவையான வசதிகளுடன் கணினிக் கூடம் இயங்கி வருகிறது. இங்கே ஆரம்ப, இடைநிலை வகுப்பு மாணவர்கள் செயற்பாடுகளுடன் கற்க, தகவல் தொழில்நுட்ப ஆசிரியை இல்லாத போதும் நூலக ஆசிரியர் உதவி வருகின்ற மையும், கடந்த வருடம் தென்மராட்சி கல்வி வலயத்தால் நடை முறைப்படுத்தப்பட்ட முறைசாரக் கல்வித்திட்டத்தின் கீழ் எமது பாடசாலையிலும் இக்கிராமத்து 22 மாணவர்கள் கணினிக்கல்வி

கற்கை நெறியைப் பூர்த்தி செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிசு உதான வங்கி அலகு

மாணவர்கள் கற்கும் போதே சேமிக்கவும் வங்கிக் கொடுக்கல் வாங்கல் முறைமைகளை அறிந்திடவும் உதவும் வகையில் மக்கள் வங்கியினரின் சிசு உதான அலகு எமது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2005-ம் ஆண்டிலிருந்து இந்த வருடம் வரை எமது மாணவர்கள் பதினாறு இலட்சம் ரூபாவிற்கு மேலதிகமான சேமிப்பைச் செய்துள்ளனர். எமது பாடசாலைப்பரிசில் நாளுக்காக வருடாந்தம் மக்கள் வங்கியினர் ஐயாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்து வருகின்றமை எமது பாடசாலைக்கும் மக்கள் வங்கிக்கும் இடையான நல்லுறவை எடுத்துக்காட்டுகின்றது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு

எமது பாடசாலையின் அபிவிருத்திக்குழுவுடன் சங்கமும் பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றன. பாடசாலையின் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களிலும் மன விருப்புடன் முன்வந்து உழைக்கின்ற இக்குழுக்கள் பாடசாலையில் நிகழும் விழாக்களிலும் பங்கேற்று உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருவது பாராட்டுக்குரியது. எதிர் காலத்திலும் இவர்களின் செயற்பாடுகள் இன்னும் வலுப்பெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலையின் அபிவிருத்திப் பாதையில் பழைய மாணவர் சங்கமும் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. பாடசாலை யின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சரீர உதவிகளையும், நிதி உதவிகளையும் வேண்டிய சந்தர்ப்பங்களில் எல்லாம் செய்து வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். கடந்த இரண்டு வருடங்களாகப்

பாடசாலையில் நடைபெற்ற மெய்வல்லுநர்ப் போட்டிக்கான முழு அனுசரணையையும் வழங்கியிருந்தமையைக் குறிப்பிட விரும்புகிறேன்.

## ஆசான் அவை

எமது பாடசாலை ஆசானவையானது ஆசிரியர்கள் அனைவரும் ஒரு குடும்பமெனப் பணியாற்ற அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவ் ஆசானவை பாடசாலையின் தொழிற்பாடுகள் அனைத்திலும் பங்கேற்று பாடசாலையின் பெருமையை உயர்த்த உதவிவருகின்றது. ஆசிரியர்களின் நலனைக் கவனிப்பதிலும் அவர்களது சுகதுக்கங்களில் பங்கெடுத்துக் கொள்வதிலும், இடமாற்றம், ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களைக் கௌரவிப்பதிலும் மாணவர் நலன்புரி விடயங்களைக் கவனிப்பதிலும் அருஞ்சேவையாற்றி வருகிறது.

## பாடசாலைத் தேவைகள்

எமது பாடசாலை கஸ்டப் பிரதேசமான மிருசுவில் வடக்கில் அமைந்துள்ளது. இது வளப்பற்றாக்குறைகளுடன் பல இன்னல் களுக்கு முகம் கொடுத்து இயங்கி வருகின்றது. இப் பாடசாலையின் தேவைகள் விரைவாகப் பூர்த்திசெய்யப்பட வேண்டியவையாக உள்ளன.

எமது பாடசாலை மாணவர்களின் கற்றல் தேவைகளை நிறைவேற்றக் கூடிய அளவுக்கு வகுப்பறைகள் போதாதது உள்ளன. குறிப்பாக மூன்று வகுப்பறைகள் அடிப்படைவசதிகள் அற்ற மணல் தளத்தைக் கொண்ட வகுப்பறைகளாக உள்ளன. நான்கு வகுப்பறைகள் நவீன கல்விப் போக்கிற்கான நியமங்கள் எதுவும் அற்ற பழைய திறந்த மண்டபத்தில் பல்வேறு கஸ்ரங்களுடன் கற்றலுக்கு பொருத்தம் இல்லாதவையாக அமைந்துள்ளன.

செயற்பாடுகளுடன் கூடிய விஞ்ஞானக்கல்வியைக் கற்பதற்குரிய ஆய்வு கூடவசதி இல்லாத நிலையில் விஞ்ஞானக் கல்வி தொடர்கின்றது.

மாணவர்களின் அறிவுத்தேடல்களையும் அவர்களுடைய சுயமான கற்றலுக்குத் தேவையான ஆற்றல்களையும் விரிவு படுத்த கற்றல் வளநிலையம் அவசியமாக உள்ளது.

போட்டி நிறைந்த சமூகத்திற்கேற்ப மாணவர்களின் தேர்ச்சி நிலைகளை மேம்படுத்துவதற்கு சங்கீத, நடன பாடங்களிற்கான தனித்தனி அறைகள் அவசியமானதாக உள்ளன. இவற்றைக் கவனத்திற் கொண்டு '100'×25' அளவுடைய இருமாடி வகுப்பறைத் தொகுதி அவசியமாக உள்ளது. இத்தகைய தேவைகளைக் கொண்ட பாடசாலை தற்போது வசதிப்பாடசாலை என்னும் வகைக்குள் அடக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியதே. விளையாட்டுத் துறையில் தேசியமட்டம்வரை கால் பதித்த எமது மாணவர்களின் ஆற்றலையும் ஆர்வத்தையும் தூண்டி தேசிய மட்டத்தில் சாதனைகள் நிலைநாட்டத் தேவையான ஆசிரியரை தேவையறிந்து எமக்கு நல்கிய போதும் ஒரு பொருத்தமான மைதானம் இல்லாதிருப்பது பெரும் குறையாக உள்ளது.

மேற்குறித்த எமது தேவைகளைக் கடந்த காலங்களில் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தும் நிறைவேற்றப்படவில்லை. எதிர்காலத்திலாவது கல்வித்திணைக்களம், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எமது தேவையின்பால் தங்களின் பயனுறுதிமிக்க ஒத்துழைப்பை நல்குவார்கள் என நம்புகின்றோம்.

## பாடசாலை வளர்ச்சிக்கு உதவிக்கரம் நீட்டியோர்

1. கடந்த வருடம் இறைபதமடைந்த முன்னாளில் இப்பாடசாலையில் அதிபராகச் சேவையாற்றிய மிருசுவில் வடக்கைச் சேர்ந்த அமரர் திரு. ச. க. தம்பு அவர்களின் நினைவுச்சின்னமாக அவர்களது குடும்பத்தினர் என்றும் அழகுடன் மிளிரும் நுழைவாயில் வளைவு ஒன்றை அமைத்துத் தந்துள்ளனர்.

2. எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரித்தானியாவில் வசித்து வருபவருமான திருமதி தவமணி கனகசபை அவர்கள் வசதி குறைந்த திறமையான மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கொடுப்பனவாக 10000 ரூபாவினைக் கடந்த வருடம் வழங்கியிருந்தார்.

3.மக்கள் வங்கியினர் தமது வங்கியில் எமது மாணவர்கள் நடைமுறைப்படுத்திவரும் சிசு உதான சேமிப்பைப் பாராட்டி இவ்வருடம் பரிசில் நாளுக்காக 5000.00 ரூபாவினை வழங்கியுள்ளனர்.

4. பழைய மாணவர் சங்கமானது வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிக்கான முழுச் செலவையும் கடந்த இரு வருடங்களாக வழங்கி வருகின்றனர்.

5. இவ்வருடம் பாடசாலை மதிலின் குறைவேலைகளையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிட வேலைகளையும் செய்வதற்குப் பல்வேறு வழிகளிலும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உதவி புரிந்துள்ளார்கள்.

பாடசாலையின் வளர்ச்சிக்காக உதவிக்கரம் நீட்டும் நல்லுள்ளம் கொண்ட யாவருக்கும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும்.

## நிறைவுரை

எமது பாடசாலையானது இம்மாதம் பதின்மூன்றாந்திகதி தனது தொண்ணூறாம் அகவையில் எளிமையாகப்பிறந்த தின நிகழ்வைக் கொண்டாடிய கல்வி நிறுவனமாகும். இதன் அமைவிடம் அதி கஸ்டப்பிரதேசமாக இருப்பதால் இதன் வளர்ச்சியில் பல்வேறு வகையான தடைகளையும் சவால்களையும் எதிர் நோக்கித் கொண்டே செல்ல வேண்டியுள்ளது. இருப்பினும் சவால்களுக்கு முகங்கொடுத்து, பாடசாலைக்காகப் பாடுபடும் அனைவரையுமே நன்றியுடன் பராட்டுகிறேன். எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக எந்நேரமும் ஆர்வத்துடன் செயற்பட்டு வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக்குழு, மற்றும் பழையமாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள், ஆகியோருக்கும் என்னோடு தோளோடு தோள் நின்றுதவும் ஆசிரியப்பெருந்தகைகளுக்கும் நன்றி கூறுகிறேன்.

மேலும் எமது அழைப்பைப் பெருமனதுடன் ஏற்று இவ் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் விருந்தினர் கள், மற்றும் விழா சிறப்புடன் நடைபெற நிதியுதவியளித்தவர்கள், எமது அறிக்கையைப் பொறுமையுடன் செவிமடுத்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்து பரிசில் நாள் அறிக்கையைச் சமர்ப்பித்து நிறைவு செய்து விடைபெறுகின்றேன்.

நன்றி

வணக்கம்

**திரு.ஐ. தேவாஸ்வரன்**

வித்தியாலய முதல்வர்

# ஆளணி விபரம்

| | |
|---|---|
| 1. திரு. ஐ. தேவாசுவரன் | SLPS 2II B.com(Hons) H.N.D.A & P.G.D.E. |
| 2. திருமதி வி. பாலதேவா | B.A, P.G.D.E., sp Trd (Tamil) |
| 3. திருமதி ஜெ. அ. நீக்கிலஸ் | B.A, P.G.D.E. |
| 4. திருமதி த. செந்தில்ராசா | SP, Trd (Primary) |
| 5. திரு. க. றகுமார் | Bsc. P.G.D.E. (Merit), MED |
| 6. திருமதி அ. அருள்நேசன் | Na. Dip in Teach, (English) |
| 7. திருமதி கா. பிரபாகரன் | B.B.A P.G.D.E. |
| 8. திருமதி பா. சந்திரகுமார் | B.A |
| 9. செல்வி க. செல்வமலர் | SP Trd (music) |
| 10. திருமதி மே. அ.ஜெயசந்திரன் | SP Trd (primary) |
| 11. திருமதி கா. றோகன் குமார் | B.FA |
| 12. திரு. சே. அபூர்வபாலன் | Na.Dip in Teach. (science) |
| 13. செல்வி பா.ஜெயனேஸ்வரி | Na.Dip in Teach.(primary), B.A |
| 14. திரு. ந. விமலகுமார் | SP. Trd (primary), B.A, P.G.D.E. |
| 15. திருமதி கு.மகாதேவா | SP Trd (Agriculture) |
| 16. திரு. த. சசீகரன் | Dip in (phy. Edu) |

# 2012-ம் ஆண்டில் எமது பாடசாலையின் கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட சாதனைகள் மெய்வல்லுநர் போட்டி

11 வயது ஆண் உயரம் பாய்தல் – தே. மதிராஜ் வலய மட்டம் 3-ம் இடம்
19 வயது ஆண் தட்டெறிதல் – சி. திருக்குமரன் வலய மட்டம் 2-ம் இடம்
21 வயது ஆண் 400m ஓட்டம் – அ. மைக்கல்ராஜ் வலய மட்டம் 3-ம் இடம்
21 வயது ஆண் 400m தடைதாண்டல் – அ. மைக்கல்ராஜ் வலய மட்டம் 3-ம் இடம்
21 வயது ஆண் ஈட்டியெறிதல் – அ. மைக்கல்ராஜ் வலய மட்டம் 2-ம் இடம்
11 வயது பெண் நீளம் பாய்தல் – ஜெ. அனுசியா வலய மட்டம் 1-ம் இடம் (Best Performance)
11 வயது பெண் 100m ஓட்டம் – க. கானுஜி வலய மட்டம் 2-ம் இடம்
11 வயது பெண் 100m ஓட்டம் – க.கானுஜி வலய மட்டம் 2-ம் இடம்
13 வயது பெண் உயரம் பாய்தல் – யோ. சோபினா வலய மட்டம் 1-ம் இடம்
மாவட்ட மட்டம் 2-ம் இடம்
13 வயது பெண் நீளம் பாய்தல் – க.கானுஜி 1-ம் இடம் (Best Performance)
13 வயது பெண் 4×100m அஞ்சல் – 1-ம் இடம்
15 வயது பெண் 100m ஓட்டம் – ச.துர்க்கா வலய மட்டம் 3-ம் இடம்
15 வயது பெண் தட்டெறிதல் – அ.ஜிவினிதா வலய மட்டம் 3-ம் இடம்
15 வயது பெண் ஈட்டியெறிதல் – அ. ஜிவினிதா வலய மட்டம் 2-ம் இடம
15 வயது பெண் 4×100m அஞ்சல் – வலய மட்டம் 2-ம் இடம்
15 வயது பெண் 4×400m அஞ்சல் – வலய மட்டம் 2-ம் இடம்

## தமிழ் மொழித்தினப் போட்டிகள் – 2012

பிரிவு I – எழுத்தாக்கம் – இ.கிருபிகா – வலயமட்டம் 1-ம் இடம்
மாவட்டமட்டம் 2-ம் இடம்
பிரிவு 4 – குறுநாடகம் ஆக்கம் – உ.அபினா – வலயமட்டம் 1-ம் இடம்
பிரிவு 2 – நடனம்-தனி – மோ.தனுசிகா – வலயமட்டம் 1-ம் இடம்
பிரிவு 1 – பாவோதல் – நி.சமீனா – வலயமட்டம் 1-ம் இடம்
மாவட்டமட்டம் 2-ம் இடம்
பிரிவு 1 – கதைகூறல் – சி.மதுராங்கா – வலயமட்டம் 2-ம் இடம்
பிரிவு 1 – பேச்சு – கு.சுமதினி – வலயமட்டம் 2-ம் இடம்
பிரிவு 2 – பாவோதல் – த.அஜிதா – வலயமட்டம் 2-ம் இடம்
பிரிவு 2 – வாசிப்பு – சி.கஜந்தினி – வலயமட்டம் 3-ம் இடம
பிரிவு 2 – பேச்சு – த.ஜீவிதா – வலயமட்டம் 3-ம் இடம்
பிரிவு 2 – நடனம்-குழு – வலயமட்டம் 3-ம் இடம்

## ஆங்கில தினப் போட்டிகள் - 2012

தரம் - 4 பாவோதல் வலயமட்டம் - 2-ம் இடம் - க. கஜேந்தினி
தரம் - 11 பாவோதல் வலயமட்டம் - 3-ம் இடம் - க. தனோசா

## சைவ சமயப்போட்டிகள் - 2012

கோலம் போடுதல் தரம் 6 - ந.துசியா - வலயமட்டம் - 1-ம் இடம்
வில்லுப்பாட்டு - குழு - வலயமட்டம் - 2ம் இடம்
கோலம் போடுதல் - ஆசிரியர்களுக்கானது வீ.பாலதேவா 2-ம் இடம்

## சமூக விஞ்ஞானப் போட்டிகள்

தரம் - 7 த. ஜீவிதா - வலயமட்டம் 1-ம் இடம்
மாகாணமட்டம் 3-ம்இடம்,
தேசியமட்டம் 5ம் இடம்

## விவசாய விஞ்ஞானப் போட்டிகள் - 2012

| | |
|---|---|
| தரம் 11 யோ. அபிரா | 1-ம் இடம் வலயமட்டம் |
| தரம் 11 பி. ரிவோஜன் | 3-ம் இடம் வலயமட்டம் |
| தரம் 10 கு. சிந்துஷா | வலயமட்டம் - பாராட்டுச்சான்றிதழ் |
| தரம் 10 க. கஜிதா | வலயமட்டம் - பாராட்டுச்சான்றிதழ் |
| தரம் 11 பா. பானுஜன் | வலயமட்டம் - பாராட்டுச்சான்றிதழ் |

## கணித வினாடி வினாப் போட்டிகள் - 2012

தரம் 7 த. ஜீவிதா வலயமட்டம் தேர்ச்சி

## க.பொ.த.சாதாரண தரப் பெறுபெறுகள் - 2012

| | |
|---|---|
| 1.செல்வி. கோ. தயாளினி | - 5A,B,C,2S |
| 2.செல்வன் பி. ரிவோஜன் | - 5A,2C, S |
| 3.செல்வி க. தனோசா | - 4A,3B,C,S |
| 4.செல்வி யோ. அபிரா | - 4A,2B,2C,S |
| 5.செல்வன் பா. செந்தூரன் | - 2A,5B,C,S |
| 6.செல்வன் பா. பானுஜன் | - 2A, B,4C,S |
| 7.செல்வி த. வாசுகி | - 2A,3C,3S |
| 8.செல்வன் லி. ஜனுஷென் | - A,B,3C,2S |
| 9.செல்வன் சி. பிரணவன் | - A,2C,3S |

## தரம் - 5 புலமைப்பரிசிற் பரீட்சை - 2012

செல்வி. சி. மதுரங்கா - 154 புள்ளிகள்

# பரிசில் நாள் 2013 பரிசில் பெறுவோர்

## தரம் - 1

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 1 | சி. அபிஷாலினி | மொழி, கணிதம், சுற்றாடல் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி, கோலம், பண்ணிசை |
| 2 | கௌ. ஹம்சிகா | மொழி, கணிதம், சுற்றாடல் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி |
| 3 | அ. சியாந்தி | மொழி, கணிதம், சுற்றாடல் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி |
| 4 | மோ. கீர்த்திகா | மொழி, கணிதம், சுற்றாடல் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி |
| 5 | தி. யனுசா | மொழி, கணிதம், சுற்றாடல் | | திருக்குறள், அறநெறி |
| 6 | சி. பபிஷன் | மொழி, கணிதம், சுற்றாடல் | | அறநெறி, திருக்குறள் |
| 7 | ட. டர்ஜினி | மொழி, கணிதம், சுற்றாடல் | | வாய்பாடு |
| 8 | யோ. விதுஷன் | கணிதம் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி |
| 9 | ஜெ. மிதுஷா | மொழி, கணிதம் | | வாய்பாடு |
| 10 | தி. ஆரூரன் | கணிதம் | | அறநெறி, திருக்குறள் |
| 11 | சு. தனுஷ் | கணிதம் | | வாய்பாடு |
| 12 | ஜெ. லக்ஷன் | | கணிதம் | வாய்பாடு |
| 13 | ச. தேனுகா | | கணிதம் | |
| 14 | ஜெ. ஜெனுஷன் | | கணிதம் | திருக்குறள் |
| 15 | ம. தர்சிகா | | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி |
| 16 | நி. சாருசன் | | | வாய்பாடு, திருக்குறள், பண்ணிசை, அறநெறி |
| 17 | ர. தேனுஜன் | | | திருக்குறள் |

# தரம் - 2

| ஏநா | மாணவர் பெயர் | சிறப்புந்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 18 | கு. தேனுஷா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி - தேர்ச்சி, கோலம், பண்ணிசை சிறப்புதேர்ச்சி |
| 19 | சி. ஜினிசா | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | | வாய்பாடு, திருக்குறள், அறநெறி தேர்ச்சி |
| 20 | பா. மதுஷன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | | வாய்பாடு - தேர்ச்சி |
| 21 | த. அபினேஸ் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | | வாய்பாடு - தேர்ச்சி |
| 22 | இ. தஜீகா | தமிழ், சுற்றாடல், சமயம் | கணிதம் | வாய்பாடு, திருக்குறள் அறநெறி - தேர்ச்சி |
| 23 | க. பிறேமா | தமிழ், சுற்றாடல், சமயம் | கணிதம் | வாய்பாடு, திருக்குறள் அறநெறி - தேர்ச்சி |
| 24 | மோ. ஜினித் | சுற்றாடல், சமயம், கணிதம் | தமிழ் | |
| 25 | சு. சஞ்ஜய் | கணிதம், சுற்றாடல், சமயம் | தமிழ் | வாய்பாடு |
| 26 | ந. நின்துஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல் | | |
| 27 | ம. ஜனுசன் | தமிழ் | சுற்றாடல், சமயம், கணிதம் | வாய்பாடு - தேர்ச்சி |
| 28 | ப. தனுஷன் | கணிதம் | தமிழ், சுற்றாடல், சமயம் | வாய்பாடு - தேர்ச்சி |
| 29 | பி. சிறிநந்தன் | கணிதம் | | |
| 30 | வி. வானதி | | | வாய்பாடு - தேர்ச்சி |

## தரம் - 3

| நோ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 31 | ம. சர்மிலன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | | திருக்குறள், வாய்பாடு - தேர்ச்சி, கோலம் |
| 32 | சி. லதுர்ஷன் | தமிழ், கணிதம், சமயம் | சுற்றாடல் | திருக்குறள் |
| 33 | வி. யசோகா | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம் | கணிதம் | |
| 34 | சி. இளவேணி | தமிழ், சமயம், ஆங்கிலம் | சுற்றாடல்,கணிதம் | |
| 35 | லி. டேனுசா | தமிழ், கணிதம், சமயம் | சுற்றாடல் | பண்ணிசை - சிற. தேர்ச்சி |
| 36 | ப. பிரியந்தன் | தமிழ், கணிதம், சுற்றாடல் | சமயம் | |
| 37 | ஆ. தர்மினி | தமிழ், சமயம் | | |
| 38 | ஜெ. பிரியங்கன் | தமிழ், சமயம் | | |
| 39 | ர. ரலைச்சன் | கணிதம் | | |
| 40 | சி. தேனுகா | தமிழ் | | |
| 41 | பி. சர்மிதா | சமயம் | | |

## தரம் - 4

| நோ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 42 | க. கஜேந்தினி | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், கணிதம் | | திருக்குறள் அறநெறி, பண்ணிசை, தமிழறிவு, My Vocabulary தேர்ச்சி, Recitation வலய மட்டம் 2-ம் இடம் |
| 43 | த. ஆர்த்திகா | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், கணிதம் | | திருக்குறள் அறநெறி, பண்ணிசை, தமிழறிவு, My Vocabulary தேர்ச்சி, கோலம் |
| 44 | இ. ஷானுகா | தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், கணிதம் | | அறநெறி, தமிழறிவு My Vocabulary தேர்ச்சி, |

## தரம் - 4 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 45 | பா. ரிலக்சன் | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம் | | |
| 46 | றெஜீனா | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம் | | |
| 47 | ச. டிலானி | தமிழ், சுற்றாடல், சமயம் | | பண்ணிசை - சிற. தேர்ச்சி |
| 48 | விதுஷா | தமிழ், சமயம் | சுற்றாடல் | |
| 49 | ஷார்மிகா | தமிழ், சமயம் | சுற்றாடல் | |

## தரம் - 5

| | | | | |
|---|---|---|---|---|
| 50 | சி. மதுரங்கா | தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம் | ஆங்கிலம் | தமிழ்த்தினம் கதைகூறல் 2-ம் இடம், தமிழறிவு My vocabula |
| 51 | த. யதுகோபன் | தமிழ், சுற்றாடல், சமயம் | ஆங்கிலம், கணிதம் | தமிழறிவு |
| 52 | இ. கிருபிகா | தமிழ், சுற்றாடல், சமயம் | ஆங்கிலம், கணிதம் | தமிழ்த்தினம், ஆக்கம் வலயமட்டம் 1-ம் இடம், மாவட்டமட்டம் 2-ம் இடம், கோலப் போட்டி தேர்ச்சி, திருக்குறள்போட்டி வலய மட்டம் 1-ம் இடம், தமிழறிவு |
| 53 | கு. சுமதினி | தமிழ், சுற்றாடல், சமயம் | ஆங்கிலம், கணிதம் | தமிழ்த்தினம், பேச்சு வலயமட்டம் 2-ம் இடம் |

## தரம் – 5 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 54 | நி. சமீனா | தமிழ், சுற்றாடல், சமயம் | தமிழறிவு | தமிழ்த்தினம், பாவோதல், வலயமட்டம் 1-ம் இடம், மாவட்டமட்டம் 2-ம் இடம், பண்ணிசை அதிசிறப்பு |
| 55 | ஜெ. அனுசியா | தமிழ், சுற்றாடல், சமயம் | | நீளம்பாய்தல் வலயமட்டம் 1-ம் இடம், தமிழறிவு |
| 56 | க. அனுசியா | தமிழ், சமயம் | சுற்றாடல், ஆங்கிலம், | |
| 57 | தி.ஆர்நிகன் | | சமயம் | |
| 58 | வி. நிருஷன் | | சமயம் | |
| 59 | ச. சினேகா | | சமயம் | |
| 60 | கே. ஜெயந்தினி | | தமிழ் | பண்ணிசை - அதிசிறப்பு |
| 61 | அ. சர்மினி | | சுற்றாடல் | |
| 62 | பி. தேனுகா | | சுற்றாடல் | |
| 63 | தே. மதிராஜ். | | | உயரம் பாய்தல், வலயமட்டம் 3-ம் இடம் |

## தரம் – 6

| | | | | |
|---|---|---|---|---|
| 64 | த. அஜிதா | தமிழ், சமயம், கணிதம், நடனம், குடியியல், செய்முறை, சுகாதாரம் | விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம், புவியியல், | தமிழ்த்தினம் - பாவோதல் 2-ம் இடம் |
| 65 | ந. துஷியா | தமிழ், சமயம், விஞ்ஞானம், நடனம், குடியியல் | வரலாறு, புவியியல், ஆங்கிலம், கணிதம், செய்முறை | கோலம் போடுதல் வலயமட்டம் 1-ம் இடம் |
| 66 | ம. மிதுஷா | தமிழ், சமயம், நடனம், புவியியல், குடியியல் | கணிதம், சுகாதாரம், செய்முறை, வரலாறு, விஞ்ஞானம் | |

## தரம் - 6 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 67 | மோ. தனுசிகா | சமயம், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், குடியியல் | தமிழ், புவியியல், சுகாதாரம், செய்முறை | தமிழ்த்தினம், நடனம் 1 - ம் இடம் |
| 68 | க. தெனுசிகா | சமயம், விஞ்ஞானம், சங்கீதம், குடியியல் | தமிழ், கணிதம், புவியியல், வரலாறு, செய்முறை | |
| 69 | பா. ரிசாந்தினி | சமயம், சங்கீதம், குடியியல் | கணிதம், சுகாதாரம், விஞ்ஞானம், செய்முறை | |
| 70 | கு. விந்துஜா | சமயம், சங்கீதம், குடியியல் | சமயம், விஞ்ஞானம், ஆங்கிலம், புவியியல், சுகாதாரம், செயன்முறை, வரலாறு | |
| 71 | கா. நிக்ஷாயினி | சமயம், சங்கீதம், குடியியல் | தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு, சுகாதாரம், செய்முறை | |
| 72 | ந. விணோஜா | சமயம், குடியியல் | தமிழ், விஞ்ஞானம், நடனம், வரலாறு, செய்முறை | |
| 73 | கு. கோபிகா | சமயம், குடியியல் | விஞ்ஞானம், சங்கீதம், புவியியல், சுகாதாரம் | |

## தரம் - 6 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 74 | சு. சங்கீத் | சமயம் | ஆங்கிலம், குடியியல், தமிழ், சுகாதாரம், விஞ்ஞானம், செய்முறை, சங்கீதம், வரலாறு | |
| 75 | ச. பிருந்தாபன் | சமயம் | விஞ்ஞானம், சங்கீதம், குடியியல், செய்முறை | |
| 76 | த. விவேக் | சமயம் | விஞ்ஞானம், புவியியல், செய்முறை | |
| 77 | வி. வாகீசன் | சமயம் | சங்கீதம், குடியியல் | |
| 78 | ற. நிருபன் | | சங்கீதம், சமயம் | |
| 79 | ந. யுதிஸ்திரன் | | சங்கீதம் | |
| 80 | ச. பிரதீஸ் | | கணிதம், சங்கீதம் | |
| 81 | ஏ. நிருத்திகா | | சங்கீதம் | |
| 82 | உ. சுயனா | சங்கீதம் | சமயம் | |
| 83 | ர. அபிரா | | சமயம், நடனம் | |

## தரம் – 7

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 84 | த. ஜீவிதா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், செ. தொ, புவியியல், வரலாறு | | வலயமட்டம் தமிழ்த்தினம் பேச்சு 3-ம் இடம், சமூகவிஞ்ஞானப் போட்டி, வலயமட்டம், 1-ம் இடம், மாகாணமட்டம் 3-ம் இடம், தேசியமட்டம் 5-ம் இடம் |
| 85 | க. ஹானுஜி | சமயம், தமிழ், விஞ்ஞானம், சங்கீதம், செ. தொ. புவியியல், குடியுரிமை | ஆங்கிலம், சுகாதாரம், வரலாறு, கணிதம் | வலயமட்டம் 100m, 200m 2-ம் இடம், நீளம்பாய்தல் 1-ம் இடம் |
| 86 | கோ. சாகித்தியா | சமயம், தமிழ், விஞ்ஞானம், நடனம், சுகாதாரம் | கணிதம், வரலாறு, குடியுரிமைக்கல்வி | |
| 87 | பா. பிருந்தாபன் | சமயம், கணிதம், வரலாறு | விஞ்ஞானம், குடியியல், தமிழ்,, சுகாதாரம் | |
| 88 | அ. தர்சிகா | சமயம், சங்கீதம், குடியுரிமை | தமிழ், விஞ்ஞானம், சுகாதாரம் | |
| 89 | இ. எழிலரசி | சமயம் | தமிழ், விஞ்ஞானம், நடனம், செ.தொ. சுகாதாரம், புவியியல் | |
| 90 | க. பிறேமலதா | சமயம், சங்கீதம் | விஞ்ஞானம் | |
| 91 | சி. கஜந்தினி | சமயம் | சங்கீதம், புவியியல் | |
| 92 | ம. தட்சாயினி | சங்கீதம், சமயம் | | |

## தரம் – 7 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 93 | ஏ. நிலோஜினி | சமயம் | சங்கீதம் | |
| 94 | வே. கிருசாயினி | விஞ்ஞானம் | | |
| 95 | சி. பிரவீனா | சமயம் | | |
| 96 | வி. வசிகரன் | சமயம் | | |
| 97 | பா. தர்சிகா | | சமயம் | |

## தரம் – 8

| | | | | |
|---|---|---|---|---|
| 98 | கா. ரவிராஜ் | தமிழ், சமயம், வரலாறு, புவியியல், சங்கீதம், சுகாதாரம் | கணிதம், விஞ்ஞானம், செயன்முறை | |
| 99 | மோ. கிருஸ்ரிகா | சமயம், தமிழ், சங்கீதம், சுகாதாரம் | செயன்முறை, புவியியல், விஞ்ஞானம், வரலாறு | |
| 100 | நா. பிரதீபா | சமயம், தமிழ், சங்கீதம் | செயன்முறை, புவியியல், சுகாதாரம், விஞ்ஞானம் | |
| 101 | த. ஜனனி | சமயம், தமிழ், சங்கீதம், புவியியல், சுகாதாரம் | செயன்முறை, வரலாறு, விஞ்ஞானம் | |
| 102 | த. லோகதாஸ் | தமிழ், சமயம் | செயன்முறை புவியியல் | |
| 103 | பா. ரிஷாந்தன் | சமயம், தமிழ் | சங்கீதம், புவியியல் | |

## தரம் - 8 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 104 | சி. நிரோசன் | | சமயம் | |
| 105 | ச. துர்க்கா | | | 100m ஓட்டம், வலயமட்டம் 3-ம் இடம் |
| 106 | யோ. சோபினா | | | உயரம்பாய்தல் வலயமட்டம் 1-ம் இடம், மாவட்டமட்டம் 2-ம் இடம் |

## தரம் - 9 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 107 | சி. ஜீவினிதா | தமிழ் | சமயம், சங்கீதம், செயல்முறை, சுகாதாரம் | தட்டெறிதல் வலயமட்டம், 3-ம் இடம், ஈட்டியெறிதல் 2-ம் இடம் |
| 108 | அனோஜன் | | விஞ்ஞானம், செயல்முறை, | |
| 109 | கிருஷாந்தன் | | கணிதம் | |
| 110 | சிவகலா | சமயம் | சங்கீதம், சுகாதாரம் | |
| 111 | க. கோவிந்தன் | சுகாதாரம் | செயல்முறை | |
| 112 | நா. பிரசாந் | செயன்முறை | சுகாதாரம் | |
| 113 | அ. தர்சினி | | தமிழ், சங்கீதம் | |
| 114 | இ. தஜீவரன் | | செயல்முறை | |

## தரம் - 10

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 115 | க. கஜீதா | சமயம், கணிதம், சங்கீதம் | விஞ்ஞானம், தமிழ், விவசாயம் | விவசாய விஞ்ஞான குறுவினாப்போட்டி, பாராட்டுச்சான்றிதழ் |
| 116 | க. சிந்துஷா | | விவசாயம், சமயம், விவசாயம் | விவசாய விஞ்ஞான குறுவினாப்போட்டி, பாராட்டுச்சான்றிதழ் |
| 117 | உ. அபினா | | சங்கீதம், சமயம், தமிழ் | குறுநாடக ஆக்கம் வலயமட்டம் 1-ம் இடம் |
| 118 | சி. தர்மினி | | கணிதம், சமயம், தமிழ் | |
| | ச. தர்மினி | | சமயம் | |
| | சி. பிரகாஸ் | | சமயம் | |
| | ம. மதிவதனி | | சமயம் | |
| | வி. நிஷாந்தினி | | சமயம் | |

## தரம் - 11

| | | | | |
|---|---|---|---|---|
| 119 | க. தனோசா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல் | வரலாறு, சங்கீதம், ஆங்கிலம், ICT | Recitation 3rd place |
| 120 | யோ. அபிரா | சமயம், தமிழ், விவசாயம், புவியியல் | சங்கீதம், கணிதம், விஞ்ஞானம் | விவசாய விஞ்ஞான குறுவினாப்போட்டி 1-ம் இடம் |

## தரம் - 11 தொடர்

| தொ | மாணவர் பெயர் | சிறப்புத்தேர்ச்சி | தேர்ச்சி | இணைப்பாடவிதானம் |
|---|---|---|---|---|
| 121 | கோ. தயாழினி | சமயம், தமிழ் | வரலாறு, புவியியல், கணிதம், சங்கீதம், விஞ்ஞானம் ICT | |
| 122 | பா. செந்தூரன் | சமயம், விஞ்ஞானம் | கணிதம், தமிழ், வரலாறு, | |
| 123 | பி. ரிவோஜன் | விவசாயம், புவியியல் | புவியியல் சமயம், வரலாறு, சங்கீதம் | விவசாய விஞ்ஞான குறுவினாப்போட்டி 3-ம் இடம் |
| 124 | பா. பானுஜன் | புவியியல் | சமயம், தமிழ், விவசாயம் | |
| 125 | த. வாசுகி | சமயம் | தமிழ், மனையியல் | |
| 126 | தே. நிஷா | சமயம் | தமிழ், விவசாயம், புவியியல் | |
| 127 | ப. ரவீனா | சமயம் | புவியியல் | |
| 128 | வி. ஜனுசன் | | சமயம், தமிழ் | |
| 129 | சி. தவரூபன் | | விவசாயம் | |
| 130 | தி. நிரோசன் | | சமயம் | |

# சிறப்புப் பரிசு பெறுவோர்

**க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2012**

செல்வி கோ. தயாழினி

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012**

செல்வி சி. மதுரங்கா

**தமிழ்த்தினப்போட்டி - 2012**

எழுத்தாக்கம்:- செல்வி இ. கிருபிகா மாவட்டமட்டம் 2-ம் இடம்

பாவோதல்:- செல்வி நி. சமீனா மாவட்டமட்டம் - 2-ம் இடம்

**மெய்வல்லுநர்ப்போட்டி - 2012**

உயரம்பாய்தல்:- செல்வி யோ. சோபினா மாவட்டமட்டம் 2-ம் இடம்

**சமூக விஞ்ஞானப் போட்டி - 2012**

செல்வி த. ஜீவிதா மாகாணமட்டம் 3-ம் இடம்

தேசிய மட்டம் - 5-ம் இடம்

| | | | |
|---|---|---|---|
| 11. | திரு. தி. சூரியகாந்தன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 12. | திரு. அ. மேகனதாஸ் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 13. | திரு. து. கௌரிபாலன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 14. | திரு. ந. டசிகரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 15. | திரு. சு. யோகநாதன் | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 16. | திரு. ஆ. சுகந்தன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 17. | திரு. ம. மழலேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 18. | திரு. இ. பிரியவதனன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 19. | திரு. ம. சிறிதரன் | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 20. | திரு. சி. விநாயகமூர்த்தி | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 21. | திரு. க. ஜெயசுதன் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 22. | திரு. சி. சிவகணநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 23. | திரு. ச. செந்தூரன் | படித்தமகளிர் குடியேற்றத்திட்டம் | 400.00 |
| 24. | திரு. அ. விக்கினேஸ்வரராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 25. | திரு. . சிவநேசன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 26. | திரு. க. சிவதாசன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 27. | திரு. வை. பிரபாகரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 28. | திரு. சி. ஆறுமுகம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 29. | திரு. பொ. இராஜேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 30. | திரு. க. இராசலிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 31. | திரு. சு. பாஸ்கரநாதன் | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 32. | திரு. இ. சிவறஞ்சன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 33. | திரு. சி. சிங்கராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 34. | திரு. ஜெ. தீபராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 35. | திரு. இ. இராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 36. | திரு. வை. நிசாந்தன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 37. | திரு. க. சதீஸ்குமார் | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 38. | திரு. க. குமாரகுலசிங்கம் | கரம்பகம் மிருசுவில் | 400.00 |
| 39. | திரு. நா. தயானந்தன் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 40. | திரு. கு. பஞ்சலிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 41. | திரு. ஆ. விஜயகுமார் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 42. | திரு. பொ. லிங்கேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |

| | | | |
|---|---|---|---|
| 43. | திரு. க. புருசோத்தமன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 44. | திரு. லி. சிவயோகநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 45. | திரு. கி. றஞ்சித்குமார் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 46. | திரு. வே. மனோரஞ்சன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 47. | திரு. வ. தனபாலசிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 48. | திரு. கி. மோகனதாஸ் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 49. | திரு. நா. நவரத்தினம் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 50. | திரு. க. தர்மலிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 51. | திரு. சி. சுதாகரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 52. | திரு. வி. சிவானந்தநாயகம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 53. | திரு. இ. ரஜிகரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 54. | திரு. து. குகதாசன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 55. | திரு. ச. விநாயகரூபன் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 56. | திரு. ஆ. நகுலேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 57. | திரு. வே. நகுலேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 58. | திரு. நீ. தங்கவேலு | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 59. | திரு. சி. சிவதீபன் | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 60. | திரு. ச. கோபாலகிருஷ்ணர் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 61. | திரு. செ. மகேந்திரம் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 62. | திரு. க. சிவபாஸ்கரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 63. | திரு. மு. தவநாதன் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 64. | திரு. தி. அன்ரனிராஜ் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 65. | திரு. க. கனகலிங்கம் | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 66. | திரு. வி. விவேகானந்தம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 67. | திரு. ஐ. அம்பிகைபாகன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 68. | திரு. பொ. மகேந்திரராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 69. | திரு. மு. பாக்கியநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 70. | திரு.. இ. சிவரூபன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 71. | திரு. கி. ரவிக்குமார் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 72. | திரு. வே. நாகேந்திரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 73. | திரு. ஐ. வேலுப்பிள்ளை | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 74. | திரு. செ. யோகராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 75. | திரு. வை. தனபாலசிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |

| | | | |
|---|---|---|---|
| 76. | திரு. ஆ. நாகேந்திரன் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 77. | திரு. வீ. கமலநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 78. | திரு. வ. நாகராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 79. | திரு. சி. ஜெவராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 80. | திரு. சி. கணேசலிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 81. | திரு. ஐ சந்திரசேகரராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 82. | திரு. ஜெ. இராஜேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 83. | திரு. கி ஞானேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 84. | திரு. கி. பரஞ்சோதி | எழுதுமட்டுவாழ் வடக்கு | 400.00 |
| 85. | திரு. வ. அழகேஸ்வரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 86. | திரு. ம. தேவராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 87. | திரு. சி. விஜயகுமார் | மிருசுவில் தெற்கு மிருசுவில் | 400.00 |
| 88. | திரு. க. அமிர்தலிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 89. | திரு. சு. சுப்பிரமணியம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 90. | திரு. சு.காரானசிங்கம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 91. | திரு. கா. கார்த்திகேசு | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 92. | திரு. சு. தெட்சணாமூர்த்தி | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 93. | திரு. ஆ. சிவகுமார் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 94. | திரு. ஐ. சிவகுமாரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 95. | திரு. வீ. சக்திவேல் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 96. | திரு. சி. சிவகுணசீலன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 97. | திரு. வே. சுவேந்திரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 98. | திரு. வை மகேந்திரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 99. | திரு. சி. கேசரிதாசன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 100. | திரு. இ. உதயசேகரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 101. | திரு. க. விநாயகமூர்த்தி | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 102. | திரு. கி. தியாகராசா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 103. | திரு. த. கதிர்காமநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 104. | திரு. ந. கமலேந்திரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 105. | திரு. ஆ. தட்சணாமூர்த்தி | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 106. | திரு. சி. சண்முகநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 107. | திரு. மு. பாஸ்கரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 108. | திரு. சி. சிறீஸ்காந்தன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |

| | | | |
|---|---|---|---|
| 109. | திரு. வ. பிரமா | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 300.00 |
| 110. | திருமதி வீ. குணரத்தினம் | குடமியன், வரணி | 200.00 |
| 111. | திரு. க. பாலசுப்பிரமணியம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 112. | திரு. ம. தெய்வேந்திரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 113. | திரு. மு. கந்தசாமி | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 114. | திரு. வ. கருணாகரன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 115. | திரு. க. ஏகாம்பரநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 116. | திரு.ச. சுப்பிரமணியம் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 117. | திரு. சி. வாசுதேவன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 118. | திரு. ம. ஜெயரஞ்சன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 119. | திரு. சு. பார்த்தீபன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 120. | திரு. க. கணேசமூர்த்தி | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 121. | திரு. க. பரமநாதன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |
| 122. | திரு. வி. காண்டீபன் | மிருசுவில் வடக்கு மிருசுவில் | 400.00 |

## பரிசில் நாள் பணம் வழங்கியவர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி | 5000.00 | சாவகச்சேரி |
| திரு. ஐ. தேவாஸ்வரன் | 1000.00 | அதிபர் |
| திருமதி வீ. பாலதேவா | 500.00 | ஆசிரியர் |
| திருமதி ஜெ. அன்ரன்நீக்கிலஸ் | 500.00 | ஆசிரியர் |
| திரு. க. ரகுமார் | 500.00 | ஆசிரியர் |
| திருமதி த. செந்தில்ராசா | 500.00 | ஆசிரியர் |
| திருமதி அ. அருள்நேசன் | 500.00 | ஆசிரியர் |
| திருமதி கா. பிரபாகரன் | 500.00 | ஆசிரியர் |
| செல்வி க. செல்வமலர் | 500.00 | ஆசிரியர் |
| திருமதி கு. மகாதேவா | 500.00 | ஆசிரியர் |
| திருமதி பா. சந்திரகுமார் | 500.00 | ஆசிரியர் |
| திருமதி மே. அ. ஜெயந்திரன் | 500.00 | ஆசிரியர் |
| செல்வி பா. ஜெயனேஸ்வரி | 500.00 | ஆசிரியர் |
| திரு. த. சசிகரன் | 500.00 | ஆசிரியர் |
| திரு. செ. அபூர்வபாலன் | 500.00 | ஆசிரியர் |
| திரு. ந. விமலகுமார் | 500.00 | ஆசிரியர் |
| திருமதி கா றோகன்குமார் | 500.00 | ஆசிரியர் |

